## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.235/2020

நாள்: 05.08.2026

வா.சா.2 – ராஜா

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் 05–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இன்ஜினியரிங் படித்துள்ளேன். நான் கன்ஸ்ட்ரெக்டன் வேலை செய்கிறேன். 1ம் பிரதிவாதி ராஜா என் மாமா. வாதி பாண்டியன் என் பெரியப்பா முறை உறவு ஆவார். வா.சா.ஆ.1 உள்ள என்னுடைய கையொப்பத்திற்கும், முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ.1–ல் உள்ள கையொப்பம் எழுத்துகள் தனித்தனியாக பிரித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ல் கையொப்பம் செய்துள்ளது போல் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அந்த கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.1 எழுவதற்கு முன்பு வாதி, 1ம் பிரதிவாதி, சாட்சி சின்னதுரை ஆகிய மூவரும் ஒரு வாரம் பேசினார்கள். நான் 3 நாட்கள் பேசினேன். பேசி முடித்த பிறகு வா.சா.ஆ.1–க்கான பத்திரம் எப்போது வாங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 பத்திரம் ஜெயங்கொண்டம் தாலுக்கா ஆபிஸ் எதிர்புறம் உள்ள ஒரு வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. பத்திரத்தை யார் எழுதினார்கள் என்றால் பெயர் தெரியவில்லை. எந்த ஊர்க்காரர் என்றும் தெரியாது. பத்திரத்தை மதியம் 3.00 மணிக்கு எழுதினார்கள். சார் பதிவாளர்

அலுவலகத்திற்கு வெளியே உரிமம் பெற்ற பத்திர எழுத்தர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். பத்திரம் ஜெயங்கொண்டம் கருவூலத்திலும் பத்திர எழுத்தர்களிடமும் கிடைக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1–ல் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக 1ம் பிரதிவாதி ராஜாவுக்கு எதிராக வேறு வழக்கு உள்ளது என்றால் அது எனக்கு தேவையில்லை. வழக்கு சொத்தை 2014–ஆம் ஆண்டு 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக வா.சா.ஆ.1–யை வாதி மற்றும் 1ம் பிரதிவாதியால் ஜோடிக்கப்பட்டது என்றாலும் அதில் நான் அவர்களுக்கு ஆதரவாக கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1–ல் உள்ள படி எந்த பண பரிமாற்றமும் நடைபெறவில்லை என்றாலும் வா.சா.ஆ.1 எங்களால் ஜோடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. வாதியும், 1ம் பிரதிவாதியும் எனக்கு உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.